[2002 ஏப்ரல் 26

231—

பாசனக்குளச் சங்கம்

***971—திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் மாவட்டம், வெள்ளியணை ஊராட்சியிலுள்ள பொதுப் பணித் துறையின் பாசனக்குளச் சங்கம் சரிவர இயங்காததால் அச்சங்கத்தினை மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரூர் மாவட்டம், வெள்ளியணை ஊராட்சியிலுள்ள வெள்ளியணை ஏரிப் பாசனக்குளச் சங்கம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

திருமதி ஆர். சசிகலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் குல விளக்கே, விவசாயிகளின் நலனை தன் நலனாகக் கொண்டிருக்கும், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். குடகனாறு அணையில் இருந்து வரும் தண்ணீருக்கு திண்டுக்கல் மாவட்டத்திற்கு மட்டும் பாசன உரிமை வழங்கப்பட்டு உள்ளது. வெள்ளக் காலங்களில் மட்டும் கரூர் மாவட்டத்திற்குத் திறந்து விடப்படுகிறது. இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் அரசிடம் விவசாயிகளின் நலனைக் கருதி, இப்போது மழை இல்லாத காரணத்தினால் கரூர் மாவட்டத்தில் வெள்ளியணைப் பகுதிக்கு குடிநீருக்கும், பாசனத்திற்கும் தண்ணீர் திறந்துவிட திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தண்ணீர் திறந்துவிட முடியுமா என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வெள்ளியணை ஏரி பாசனக்குளச் சங்கத்தைப்பற்றித்தான் கேள்வி விடுத்து இருந்தார்கள். இப்போது ஏரிக்குத் தண்ணீர் விடவேண்டும் என்று கோருகிறார்கள். அவர் அதற்குத் தனி வினா கொடுத்தால் விடையளிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.